Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 19

திங்கட்கிழமை
15 டிசெம்பர் 2025

கார்த்திகை 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் உருவாக்க நடவடிக்கை நிறைவு!

### ஆங்கில ஊடகம் தகவல்

**கொழும்பு, டிசெம்பர் 15**

**பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடாகக் கொண்டு வரப்படவுள்ள, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் தயாரிப்பு நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும் இந்தத் தகவலை நீதியமைச்சர் உறுதிப்படுத்தவில்லை.**

»11

## இயற்கை அனர்த்தத்தால் பொருளாதாரம் பாதிப்பு!

### சவாலை எதிர்கொள்வோம் என ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.15
நிலைபேறாகவும், படிப்படியாகவும் வளர்ச்சியடைந்துவந்த நாட்டின் பொருளாதாரத்தில் தற்போது ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இத்தகைய சவாலை எதிர்கொள்வதே ஒவ்வொருவரின் பொறுப்பு.

»12

## பேரிடர் முகாமைத்துவ தேசிய சபைக் கூட்டம்

### ஜனாதிபதி தலைமையில் இன்று

கொழும்பு, டிசெ.15
பேரிடர் முகாமைத்துவத்துக்கான சிறப்பு தேசிய சபைக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.
ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர். பிரதமர் இணைத் தலைமை

»10

## பேரிடர் பாதித்த பெண்களுக்காக 8.3 மில். டொலர் நிதிக்கோரிக்கை

கொழும்பு, டிசெ.15
இலங்கையில் இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அவசர உதவிகளை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியம் 8.3 மில்லியன் அமெரிக்க டொலர் மனிதாபிமான நிதியுதவிக்கான வேண்டு

»11

## அன்ரன் பாலசிங்கத்துக்கு யாழ்., வவுனியாவில் அஞ்சலி




யாழ்ப்பாணம், டிசெ.15
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணத்திலும், வவுனியா

»11

## இலங்கைக்கு கடத்தவிருந்த 150 கிலோ கஞ்சா சிக்கியது

மன்னார், டிசெ.15
இலங்கைக்குக் கடத்தவிருந்த 150 கிலோ கஞ்சா தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்டத்தின் முள்ளிமுனை மீன்பிடித்துறை முகத்துக்கு அருகே கடற்கரையில் மீட்கப்பட்டுள்ளது.

»10

யாழ். நகரில்

## உடைந்த கைபேசியைக் காட்டி பணம் பறிக்கும் நூதன மோசடி



### பொதுமக்களே உஷார்!! பொலிஸார் அசமந்தம்

யாழ்ப்பாணம், டிசெ.15
தனது கைபேசியைத் தட்டி வீழ்த்தி சேதப்படுத்திவிட்டீர்கள் என்று தெரிவித்து. வீதியில் பயணிப்பவர்களை அச்சுறுத்திப் பணம் பறிக்கப்படும் பல சம்பவங்கள் யாழ்ப்பாணம் நகரப் பகுதியை அண்மித்த பகுதி களில் பதிவாகியுள்ளன. ஒரே நபரே இவ்வாறு பலரிடம் பணத்தைப் பெற்றுள்ளார் என்று தெரிய

»11

## சிட்னியில் துப்பாக்கிச்சூடு 12 பேர் பலி; 29 பேர் காயம்



சிட்டினி, டிசெ.15
அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தின் சிட்னி நகரில் போண்டி கடற்கரையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இருவர் நடத்திய சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். 29 பேர் காயமடைந்துள்

»11



'போர்தான் வேற வேறையே தவிர அந்தச் சட்டம் மோதகம் எண்டால் புதுச்சட்டம் கொழுக்கட்டை மாதிரி எல்லாம் ஒண்டுதான் கண்டியளோ'

## ஆயிரம் பில்லியன் ரூபா குறைநிரப்பு பிரேரணை

### வியாழக்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கின்றது அரசாங்கம்

கொழும்பு, டிசெ.15
ஆயிரம் பில்லியன் ரூபா நிதி கோரும் குறைநிரப்பு பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. எதிர்வரும் 18 ஆம் திகதி கூடும் விசேட நாடாளுமன்ற அமர்வின்போது இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது.
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது. 500 பில்லியன் ரூபாவுக்கான குறைநிரப்பு

»11




## தராகி சிவராமுக்கு லண்டனில் விருது

லண்டன், டிசெ.15
தராகி அல்லது தராக்கி என்று பரவலாக அறியப்பட்ட மாமனிதர் தர்மரட்ணம் சிவராம் அவர்களின் துணிகரமான பத்திரிகைச் செயற்பாட்டுக்காக பிரிட்டனில் அவருக்கு வரதகுமார் நினைவு விருது வழங்கப்பட்டுள்ளது.
மாமனிதர் சிவராமின்

»11

## மசகு எண்ணெய் குழாயில் கசிவு

கொழும்பு, டிசெ.15
கொழும்புத் துறைமுகத்தில் மசகு எண்ணெய் இறக்கிக் கொண்டிருந்த கப்பல் ஒன்றின் குழாயில் கசிவு ஏற்பட்டுள்

»11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 14.12.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4285
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 01 10 35 42
விசேட எழுத்து W

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 14.12.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1352
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 09 24 34 56

**NLB ஜய**
திகதி 14.12.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0311
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 0 0 3 3

**மெகா பவர்**
திகதி 14.12.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2391
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 12
வெற்றி இலக்கங்கள் 20 27 29 42

**மஹஜன சம்பத**
திகதி 14.12.2025
சீட்டிழுப்பு இலக்கம் 6043
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 9 4 7 6 7 6

**தன நிதானய**
திகதி 14.12.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2073
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 01 60 69 70
விசேட எழுத்து V

**சுப தவசக்**
திகதி 14.12.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0159
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 17 45 51

# இடர் முகாமைத்துவக்கொள்கை புதுப்பிக்கப்படவேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

**கொழும்பு,டிசெ.15**

**நாட்டின் அனர்த்த முகாமைத்துவக் கொள்கையைப் புதுப்பிக்க வேண்டியது அவசியமாகும். அனர்த்த முகாமைத்துவத்துறை ஏனைய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்துச் செயற்படவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மாத்தளை மாவட்டத்துக்குச் சென்று இடர் நிலைமைகள் குறித்து ஆராய்ந்த பின்னர் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், பாதிக்கப்பட்ட மக்களைப் பராமரிப்பதும் பாதுகாப்பதும் அனைவரினதும் பொறுப்பும் கடமையுமாகும்.

எதிர்காலத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பான வாழ்க்கையை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

வளிமண்டலவியல் திணைக்களமும், வானிலை ஆய்வாளர்களும் கடந்த 11ஆம் திகதி முதல் வானிலை நிலைமை படிப்படியாக மோசமடைந்து வருவதாக படிமுறை படிமுறையாக நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவித்து வந்தனர். 10 நாள்களில் இது புயலாக உருவெடுக்கும் என்றும் முன்னறிவித்தல் விடுத்திருந்தனர். இந்தக் காலகட்டத்தில், மக்களை வெளியேற்றவும், மக்கள் மீது வரும் பாதிப்புகளைக் குறைக்கவும், அனர்த்த முன்னாயத்தத் திட்டங்களை முன்னெடுக்கவும், அனர்த்தங்களால் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளை, பிரதேசங்களை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கும் இயலுமை காணப்பட்டிருந்த போதிலும், இதனை எதிர்கொள்வதற்குத் தேவையான இடர் முகாமைத்துவத் திட்டமொன்று இந்த அரசாங்கத்திடம் இருக்கவில்லை. ஆகையால் நாட்டுக்குப் புதிய இடர் முகாமைத்துவ வேலைத்திட்டமொன்று அவசியம். நாடு சுனாமி மற்றும் சூறாவளிகளால் பாதிக்கப்பட்டது. காலநிலை மாற்றம், சீரற்ற வானிலை காரணமாக பல பாதிப்புகளுக்கு நாம் முகங்கொடுத்துள்ளோம். ஆகையால் அனர்த்த முகாமைத்துவக் கொள்கையைப் புதுப்பிக்க வேண்டிய தேவை எமக்கு காணப்படுகின்றது. அதேபோல், அனர்த்த முகாமைத்துவத் துறையை ஏனைய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்துச் செயற்படவேண்டும். கீழ்மட்டத்தில் இருந்து அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளை நியமித்து, ஆபத்தான பகுதிகளை அடையாளம் கண்டு, வலுவான கட்டமைப்பிற்குள் அமைந்த ஒரு திட்டத்தை வகுத்து முன்னெடுக்கவேண்டும் - என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 14.12.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 0751
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கம் 2 5 3 7 9 5

**Super Ball**
திகதி 14.12.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3017
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கம் 17 49 63 74

**சனிதா**
திகதி 14.12.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கம் 18 37 40 47
வெற்றி வாரம் 5178

**SASIRI**
திகதி 14.12.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 0847
வெற்றி இலக்கம் 15 29 31

**லக்ன ராசி**
திகதி 14.12.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
மேஷம்
வெற்றி இலக்கம் 14 18 31 58
சீட்டிழுப்பு வாரம் 4729

**KAPRUKA**
திகதி 14.12.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து U
சுப்பர் இலக்கம் 22
வெற்றி இலக்கம் 15 42 52 69
வெற்றி வாரம் 2193

**அத கோடிபதி**
திகதி 14.12.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கம் 13 20 43 54
வெற்றி வாரம் 2843

# சீனாவின் பிரமுகர் இலங்கை வருகை

கொழும்பு,டிசெ.15

சீனாவின் உயர்மட்ட அரசியல் தலைவர் ஒருவர் கொழும்புக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். சீன அரசாங்கத்தின் மூன்றாவது அதிஉயர் அதிகாரம் படைத்தவரான, சீன தேசிய மக்கள் காங்கிரசின் நிலையியல் குழுத் தலைவரான சோ லெஜி என்பவரே இரு நாள் விஜயமாக இலங்கை வருகின்றார்.

எதிர்வரும் 23ஆம் திகதி அவரது விஜயம் இடம் பெறும் என்று ஆங்கில வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பேரிடருக்குப் பின்னர், இலங்கைக்கு உதவுவதில் இந்தியாவும், அமெரிக்காவும் அதிகளவில் கவனம் செலுத்தி வருகின்றன.

இந்நிலையிலேயே தமது உதவித் திட்டத்தை விஸ்தரிக்கும் நடவடிக்கையில் சீனாவும் இங்கியுள்ளது. இலங்கை வரும் சீன உயர்மட்டத் தலைவர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மற்றும் அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இதன்போது, சூறாவளி தொடர்பான விடயங்கள் விவாதிக்கப்படும் அதேவேளை, நாட்டிற்கான எதிர்கால சீன உதவிகள் மற்றும் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பரந்துபட்ட கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ச-44)

# தேயிலைத் துறைக்கு பேரிடரால் பலத்த அடி

கொழும்பு,டிசெ.15

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 'டித்வா' சூறாவளியால் தேயிலைத் தொழிலுக்கு கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் துரிதகதியில் பழைய நிலைக்குக் கொண்டுவரும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கைத் தேயிலைச் சபை தெரிவித்துள்ளது.

இயற்கை அனர்த்தத்தினால், குறிப்பிடத்தக்க சேதம் ஏற்பட்டுள்ளபோதிலும் தேயிலை தொடர்புடைய விவசாயிகள், உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் கூட்டு நடவடிக்கை இலங்கை தேயிலை உற்பத்திச் சங்கிலியைப் பழைய நிலைமைக்குக் கொண்டுவரமுடியும்.

தேயிலைத் தொழிலின் உற்பத்தியுடன் சம்பந்தப்பட்ட சமூகங்களை ஆதரிப்பதிலும், சர்வதேச தேயிலை விநியோகத்தை மேம்படுத்துவதிலும் இலங்கை தேயிலைச் சபை ஈடுபட்டுள்ளது.

தற்காலிக தொழிலாளர் வெற்றிடங்கள் மற்றும் மாறுபட்ட சீரற்ற காலநிலை காரணமாக உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்படும் என ஆரம்ப கணிப்புகள் தெரிவித்திருந்தபோதிலும், தற்போதைய நிலையில் துரிதகதியில் இந்தத் தொழிற்றுறையினை மீட்டெடுக்கமுடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

# மகள் துஷ்பிரயோகம்: தந்தைக்கு மறியல்!

யாழ்ப்பாணம்,டிசெ.15

ஆபாசப் படம் காண்பித்து மகளைப் பாலியல் துன்புறுத்தலுக்குட்படுத்திய தந்தை உட்பட 5 சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 12 வயதான சிறுமி கல்முனை மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சந்தேகநபர்கள் 52,41,24 மற்றும் 40 வயதுடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது. தந்தை சுமார் 5 மாத காலமாக தனது மகளைப் பல்வேறு நபர்களுடன் பாலியல் துன்புறுத்தலுக்குட்படுத்தியதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)



டித்வா புயல் மற்றும் வெள்ளத்தால் சேதமடைந்த வடக்குக்கான ரயில் பாதையை சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பாண்டில் வரிவருமானம் ரூ. 4,000 பில்லியன்+

கொழும்பு,டிசெ.15

**2025ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களுக்குள் அரசாங்கத்தின் மொத்த வரிவருமானம் 4,033 பில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றுள்ளதென நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.**

நிதியமைச்சால் வெளியிடப்பட்ட அண்மைய அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

இதில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஊடாக 1,809 பில்லியன் ரூபாவும், இலங்கை சுங்கம் ஊடாக 1,970 பில்லியன் ரூபாவும், மதுவரித் திணைக்களம் ஊடாக 192 பில்லியன் ரூபாவும் வரி வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதுடன், ஏனைய வழிகளில் 62 பில்லியன் ரூபாவும் கிடைத்துள்ளது. 2025ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில், வாகன இறக்குமதிமூலம் ஈட்டப்பட்ட வரிவருமானம் 302 பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது. 2024ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் வாகன இறக்குமதி வரி வருமானம் 48 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியிருந்ததுடன், 2025ஆம் ஆண்டில் 350 பில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் வரிவருமானத்துக்கு அதிகபட்ச பங்களிப்பு வற் (VAT) வரியின் ஊடாகக் கிடைத்துள்ளதுடன், அது 1,615 பில்லியன் ரூபாவாகும். இதற்கு மேலதிகமாக வருமான வரி மூலம் 1,167 பில்லியன் ரூபாவை 2025 ஜனவரி ஒக்ரொபர் காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ள அரசாங்கத்துக்கு முடிந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## தொழிற்றுறைகள் பாதிப்பு; தகவல்களை வழங்குங்கள்

கொழும்பு,டிசெ.15

பாதகமான வானிலையால் பாதிக்கப்பட்ட தொழில்கள் தொடர்பாக தொழிற்றுறைப் பேரிடர் உதவிமையம் இதுவரை 13,698 தரவுகளைப் பெற்றுள்ளது. எனவே பாதிக்கப்பட்ட தொழில்கள் தொடர்பான தகவல்களை விரைவில் வழங்குமாறு கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது. இதுவரை 5,639 நுண் வணிகங்கள், 4,636 சிறு வணிகங்கள், 2,986 நடுத்தர வணிகங்கள் மற்றும் 437 பெரிய வணிகங்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட தொழில்கள் குறித்து தெரிவிக்க அமைச்சகம் 0712666660 என்ற தொலைபேசி எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் தகவலை 16ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன் வழங்கவேண்டும். www.industry.gov.lk என்ற இணையத்தளத்தைப் பார்வையிடுவதன்மூலம் தகவல்களை உள்ளிடலாம் என்றும் அமைச்சகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## 'ஸ்டார் லிங்க்' சேவையில் 100 அலகுகள் இலவசம்

கொழும்பு,டிசெ.15

அமெரிக்காவைத் தளமாகக்கொண்ட ஸ்டார்லிங்க் நிறுவனம், இலங்கையில் பேரனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு உதவும்முகமாக இணைய சேவைக்கு 100 அலகுகளை நன்கொடையாக வழங்கியுள்ளது என நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நன்கொடை தகவல் தொடர்பு மற்றும் இணைப்பை வலுப்படுத்தவும் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளை மிகவும் திறம்பட மேற்கொள்ளவும் உதவும் என அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்தார். (ச-இ)


## 7 இலட்சத்துக்கும் அதிக 'லைசென்ஸ்கள்' தேக்கம்

கொழும்பு,டிசெ.15

தற்போது நாட்டில் 7 இலட்சத்துக்கும் அதிகமான சாரதி அனுமதிப் பத்திரங்கள் அச்சிடப்படாமல் தேங்கிக் கிடப்பதாகப் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

புதியதாக இரண்டு அச்சிடும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அச்சிடும் பணிகள் இப்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலுவையில் உள்ள அனைத்து அட்டைகளையும் ஆறு மாதங்களுக்குள் அச்சிட்டு முடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## பலத்த காற்றுக்கு வடக்கில் வாய்ப்பு

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் அத்துடன் திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மணித்தியாலத்துக்கு 30-40 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் தற்காலிகமாக வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ச-இ)




## வாயில வாறதெல்லாம் வதந்தி!

ஊரைக் கெடுக்கிற கேள்விச் செவியர்தான் இப்ப இஞ்ச கூடிப்போட்டினம். இப்ப அந்தக் கேள்விச்செவியர்மாருக்கெல்லாம் 'யூரியூப்பர்' என்டு பேர் மாத்தியிருக்கினம். தாங்கட சனலை நிறையப்பேர் பாக்கோனும் என்டதுக்காக இல்லாத பொல்லாத கதையளையும் இட்டுக்கட்டி வாய்க்கு வந்த வதந்தி எல்லாத்தையும் வாந்தி எடுக்கிறதுதான் அவையின்ர வேலை. போன் வைச்சிருக்கிறவையெல்லாம் இப்ப யூரியூப்காரர்தான். தேவாரம் பாடமுதல் திருச்சிற்றம்பலம் சொல்லித் தொடங்கிறமாதிரி இவையும் "வணக்கம் உறவுகளே. இப்ப நாங்கள் எங்க நிக்கிறமெண்டால்...." எனத் தொடங்கி வாயைத் திறந்தால், மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்டிட்டுத்தான் ஓய்வினம். சாதாரணமா நடக்கிற ஒரு சம்பவத்தைக்கூட 'அதிர்ச்சி, ஆச்சரியம்,இப்பிடியும் நடக்குமா?' என்டமாதிரி சொல்லுகளைப் போட்டு அப்பிடியொரு சம்பவம் உலகத்திலயே இப்பதான் நடக்கிறமாதிரி வாயால இவையள் வடை சுட்டுக்கொண்டிருப்பினம். மீடியா பற்றின அடிப்படை அறிவோ, ஊடக ஒழுக்கமோ, எதை எப்பிடிச் சனத்துக்குச் சொல்லோனும் என்ட அக்கறையோ இவையிட்ட இருக்கிறேலை. அவைக்குத் தேவையெல்லாம் தாங்கட வீடியோக்களை கனபேர் பாக்கவேனும், அதால தாங்களுக்குக் காசு வரோனும், அவ்வளவுதான்.

இந்தக் 'கேள்வியச்செவி' யூரியூப்பர்கள் இப்ப இன்னொரு பதற்றத்தை உருவாக்கி வைச்சிருக்கினம். உந்த டித்வா புயல் அடிச்சதால வன்னியில கன குளங்கள் நிரம்பிப்போய் இருக்குது. சில குளங்களின்ர அணையளில சின்னச் சின்னச் சேதங்களும் வந்ததால அதெல்லாத்தையும் இப்ப மண்மூடையள் போட்டு, திருத்திற வேலை நடந்துகொண்டிருக்கு. அப்பிடி முத்துஐயன் கட்டுக் குளத்திலயும் வான்கதவுத் தண்ணி பாயிற இடத்துக்கு அங்கால உள்ள கட்டுகளில சின்னச் சின்ன சேதமெண்டு அதையும் கட்டிக்கொண்டு இருக்கினம். உந்தத்திருத்தவேலை நடக்கிற இடத்துக்கும், முத்துஐயன்கட்டுக்குளத்தின்ர அணைக்கட்டுக்கும் தொடர்பேயில்லை. திருத்தவேலை நடக்கிற இடம் வான்கதவால தண்ணி பாயிற இடத்தில, குளத்துக்கு வெளியால இருக்கு. ஒரு வீட்டின்ர முன் கேற் மாதிரி என்டு வைச்சுக்கொள்ளுங்கோவன். முன் கேற்றில ஏதும் பழுதெண்டால், வீடு இடிஞ்சு விழுந்திடாதுதானே. அதை மாதிரித்தான் இதுவும். ஆனால் உந்த யூரியூப்பர் மாருக்கு உந்தக்கோதாரியொண்டும் தெரியேலை.

அவையள் கமெரா, போனோட போய் இந்த இடத்தை வீடியோ எடுத்துப்போட்டு, 'முத்துஐயன்கட்டு அணைக்கட்டில பெருஞ்சேதம், எப்பவும் குளம் உடைப்பெடுக்கலாம்' என்டமாதிரி தாங்கட யூரியூப் சனல்களில போட்டிருக்கினம். இப்ப எங்கட சனமும் அல்லும் பகலும் யூரியூப்போட தானே பொழுதைப் போக்காட்டுகினம். அதால அவையும் யூரியூப்காரர் சொன்னதை நம்பி, அல்லோலகல்லோலப் பட்டிருக்கினம். முத்துஐயன் கட்டை அண்டியிருக்கிற கனபேர் குளம் உடைக்கப்போகுதெண்ட பயத்தில வீட்டை விட்டு வெளிக்கிட்டு பாதுகாப்பான இடத்துக்குப் போகவும் ஆயத்தப்படுத்தியிருக்கினம். பிறகு ஒருமாதிரி உந்த விசயம் முல்லைத்தீவு மாவட்ட கச்சேரிக்குத் தகவல் போய், அங்க இருந்த அதிகாரிமார் சனத்துக்கு 'அப்பிடியெல்லாம் ஒரு ஆபத்துமில்லை' என்டு சொன்னபிறகுதான் கொஞ்சம் நிம்மதியா இருக்கினம். அதோட இப்பிடிப் பொய்யான விசயங்களைச் சொல்லி, சனத்தை தேவையில்லாமல் பயப்பிடுத்தின யூரியூப்காரருக்கு எதிரா சட்டநடவடிக்கை எடுக்கவும் வேலை நடக்குதாம். இதை எப்பிடியோ கேள்விப்பட்ட சில யூரியூப்பர்மார் தாங்கள் போட்ட வதந்தி வீடியோக்களை அழிச்சுப் போட்டினமாம்.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சகோதரவகையில்எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். பிற்பகலுக்குமேல் நண்பர்கள்மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் உதவிக்கரமாக இருப்பார்கள்.

**இடபம்:** பிற்பகலுக்குமேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். எதிரிகள் பணிந்து வருவார்கள். பிறருக்குக் கொடுத்துவராமல் இருந்த கடன்தொகை கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**மிதுனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிள்ளைகளின் உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். கணவன்– மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துவிடுவது நல்லது. பிற்பகலுக்குமேல் வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். இளைய சகோதரவகையில் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பல முறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். கணவன் - மனைவிக்கிடையே சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவுசெய்ய நேரிடும் என்பதால், கையிருப்புக்கரையும். வாழ்க்கைத்துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்குத் திடீர்செலவுகளால் கையிருப்புக் குறையும். முக்கியமான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். பிள்ளைகள் வழியில் தேவையற்ற சில பிரச்சினைகள் ஏற்பட்டு சங்கடம் தரக்கூடும்.

**தனுசு:** சகோதரர்கள்வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். சிலருக்குத் திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்பட வேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும்.

**கும்பம்:** தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும் . கணவன் - மனைவிக்கிடையே வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார். பிற்பகலுக்குமேல் சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

## கிராம அலுவலர்கள் தொடர்பில் முறையிடுவதற்கு இலக்கம்

கொழும்பு,டிசெ.15
கிராம அலுவலர்கள் தொடர்பான முறைகேடுகள் தொடர்பில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் உடனடியாகத் தொடர்புகொள்ள தொலைபேசி இலக்கங்களை அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதன்படி ஜனாதிபதி செயலகத்துக்கு 1905 மற்றும் 011 235 4354, 011 235 4655, 011 248 4500 / 600 / 700 ஆகிய இலக்கங்களுக்கு அழைத்து முறைப்பாடு செய்யலாம்.

கிராம சேவகர் ஊடாக பரிந்துரைக்கப்பட்டதாகக் கூறப்படும் மோசடிக் கொடுப்பனவுகள், முறைகேடுகள் தொடர்பான தகவல்களை வழங்கலாம். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் உங்கள் முறைப்பாடுகளை பதிவுசெய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## திருவெம்பாவைப்பூசை

யாழ்ப்பாணம், டிசெ.15
மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை கண்ணகை அம்மன் கோயிலில் திருவெம்பாவைப் பூசை எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது. தினமும் காலை 8.30 மணியளவில் பூசைகள் இடம்பெறவுள்ளன. (ச-41-100)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை


யாழ்ப்பாணம், டிசெ.15
அண்மையில் நாட்டில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடரால் உயிர்நீத்தவர்களுக்கான ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது.

ஐந்தாம் சோமவார உற்சவம் காலை 7 மணியளவில் அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி நகுலேஸ்வரப் பெருமானுக்குப் பஞ்சமுக அர்ச்சனை, 1008 சங்காபிஷேகம் ஆகியன இடம்பெறும். வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா இடம்பெறும். இறுதியாக மகேஸ்வர பூசையும் அன்னதானமும் நடைபெறும். (ச-41-66)

## போதைப்பொருளுடன் இலங்கை வந்தவர் கைது

கொழும்பு,டிசெ.15
கட்டுநாயக்க விமானநிலையத்தில் 2 கிலோ 300 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் கட்டுநாயக்க விமானநிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ரம்புக்கனைப் பகுதியைச்சேர்ந்த 28 வயதுடையவர் என்றும் அவர் மலேசியாவிலிருந்து நாட்டுக்கு வருகைதந்துள்ளார் என்றும் தெரியவந்துள்ளது. (ச-இ)



மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தினூடாக 1.2 மில்லியன் பெறுமதியான உலர் உணவுப்பொருள்கள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாந்தை கிழக்கு மக்களுக்கு அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. (ச)

## காருண்யம் சிறுவர் நிலையத்தால் 287 குடும்பங்களுக்கு உலருணவு

முல்லைத்தீவு,டிசெ.15
புதுக்குடியிருப்பு காருண்யம் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினரால், 287 சிறுவர்களின் குடும்பத்தினருக்கு நத்தார்ப் பண்டிகையை முன்னிட்டு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. நிலையத்தின் 2025ஆம் ஆண்டுக்கான ஒளிவிழா, இல்லப் பணிப்பாளர் பி.செல்வநாயகம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் காருண்யம் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் கீழ் உள்ள 287 சிறுவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் நத்தார்ப் பண்டிகை மற்றும் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டமைக்காக தலா பத்தாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (சு-19)



## அன்ரன் பாலசிங்கத்துக்கு வேலணையில் அஞ்சலி

யாழ்ப்பாணம்,டிசெ.15
தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 19ஆவது ஆண்டு நினைவேந்தல், வேலணை வங்களாவடி பொது நினைவுச் சதுக்கத்தில் நேற்று இடம்பெற்றது. பாலசிங்கத்தின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து, ஈகைச் சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. ஊர்காவற்றுறைப் பிரதேசசபையின் உபதவிசாளர் மற்றும் பொதுமக்கள் இணைந்து அஞ்சலி செலுத்தினர். தீவக நினைவேந்தல் குழு நிகழ்வை ஏற்பாடு செய்தது. (க-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

உங்களிடம் கற்றுக்கொள்ளும் மனம் இருந்தால்
நீங்கள் முட்டாள்களிடமிருந்துகூட பாடம் கற்கமுடியும்;
அந்த மனம் இல்லாவிட்டால் உங்களால் புத்தனிடமிருந்துகூட
எதையும் கற்கமுடியாது.

– ஓஷோ–

# இழப்பு எல்லோருக்குமானதே...!


டித்வா புயலால் ஏற்பட்ட பாதிப்புகளில் தமது பொருளாதார இழப்பு கருத்திற்கொள்ளப்படவில்லை என்று ஜனாதிபதி அநுரவிடம் வெதும்பியிருக்கின்றனர் மன்னார் மாவட்ட மீனவர்கள். மீனவர்களின் நியாயமான கோரிக்கையைத் தொடர்ந்து, ஒரு வாரத்துக்குத் தேவையான உலருணவுகளை அவர்களுக்கு வழங்குமாறு ஜனாதிபதி அநுர அறிவுறுத்தியுள்ளார். மீனவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கு சமனான பெறுதியை அரசாங்கத்தின் உலருணவுத்திட்டம் ஈடுசெய்துவிடுமா என்றால், இல்லை என்பதுதான் பதில். விடயம் என்னவென்றால், இடர்களின்போது மீனவர்கள் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்படுகின்றனர். காலாகாலமாக இடம்பெறும் இந்த விரோதப் போக்கிற்கு ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாவது முற்றுப்புள்ளி வைப்பதற்கு முனையவேண்டும்.

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், வாழைச்செய்கையாளர்கள் எனப்பல தரப்பினரையும் இழப்பீடுகளைப் பெறுவதற்காகப் பதிவுசெய்யுமாறு அறிவுறுத்தியிருக்கின்றது அநுர அரசாங்கம். விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நிகரான பெறுமதி வழங்கப்படுமா? இழப்பீடுகளின்போது விவசாயிகளின் உடல் உழைப்பும், நேர விரயமும் கருத்திற்கொள்ளப்படுமா உள்ளிட்ட கேள்விகள் -சந்தேகங்கள் எல்லாம் இந்த விடயத்தில் இருக்கவே செய்கின்றன. எனினும் - எல்லாவற்றுக்கும் மேலாக, விவசாயிகளுக்கு இழப்பீடுகள் விரைந்து வழங்கப்படும் என்று விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலும், அதற்குரிய முன்முயற்சிகளும் பாராட்டப்படவேண்டியவை. நல்லது.

ஆனால், அதேயளவு ஆர்வத்தை - அக்கறையை அரசாங்கம் மீனவர்களின் விடயத்திலும் வெளிப்படுத்தவேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு. இந்தப் புயலாலும் அது ஏற்படுத்திய பேரிடர்களாலும் விவசாயிகள் எவ்வளவுக்கு எவ்வளவு பாதிக்கப்பட்டார்களோ அவ்வளவுக்கு மீனவர்களும் பாதிக்கப்பட்டனர். சுமார் இரு வாரங்களுக்கும் மேலாக மீன்பிடித் தடைக்காலம் (எச்சரிக்கைக்காலம்) தொடர்ச்சியாக நடைமுறையில் இருந்தது. தற்போதும், ஒரு காற்றுச்சுழற்சி காரணமாக கடல் தன் இயல்பை இழந்துள்ளதால், மீனவர்களின் தொழில் வாய்ப்பு முற்றாகவே அற்றுப்போயுள்ளது. நேர்மையாகக் கூறவேண்டுமெனில் கடந்த ஒரு மாதத்தில் நான்கு அல்லது ஐந்து நாள்கள்தான் மீன்பிடி நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. ஏனைய நாள்கள் புயலோடும், அச்சத்தோடும், எச்சரிக்கையோடும் பறந்துபோயின.

பயிரழிவும் மீன்பிடியும் ஒன்றல்லதான். வெள்ளம் வடிந்தோடிய பின்னர், மீண்டும் பதப்படுத்தி -பண்படுத்தி - அடுத்த பருவத்தின்போதே விளைவிக்கவும், வருமானம் பெறவும் ஒரு விவசாயியால் முடியுமாக இருக்கும். அதுபோல், ஒரு பருவத்தில் ஒட்டுமொத்த உழைப்பையும் வெள்ளம் விழுங்குவது துயரத்திலும் பெரும் துயரம். ஆனால், கடல் இயல்புக்கு வந்தால், மறுநாளே மீனவர்களின் கைகளில் பணம். எனவே, இந்த விடயத்தில் விவசாயிகளுக்குக் கூடுதல் கரிசனை காட்டத்தான்வேண்டும். அதை இம்மியும் மறுப்பதற்கில்லை. அதற்காக மீனவர்களை முற்றாகப் புறக்கணித்துவிடமுடியாது. மழைக்காலத்தில், மாதத்துக்கு மூன்று, நான்கு காற்றுச்சுழற்சிகளையும், தாழமுக்கங்களையும் இயல்பாகவே எதிர்கொள்ளும் இலங்கை போன்ற நாட்டில், மீனவர்களின் வாழ்வும், பொருளாதாரமும் சாபக்கேடாகவே மாறிவருகின்றது. மீன்பிடியைப் பிரதான பொருளாதாரமாகக் கொண்டிருக்கும் நாடு என்ற வகையில், 'ஓர் இழப்பீட்டுக் கட்டமைப்பை' இலங்கை விரைவாக ஏற்படுத்தியாகவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





## அனர்த்த நிவாரணங்களுக்கு 13 பில்லியன் ரூபா விடுவிப்பு

கொழும்பு,டிசெ.15

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்துக்காக இதுவரையில் மொத்தமாக 13 பில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது என்று நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கும், வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்காகவே இந்த நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது. பண நன்கொடைகள் பலரிடம் இருந்தும் கிடைக்கப் பெறுகின்றன. இந்த ஒத்துழைப்பை வழங்கும் அனைவருக்கும் நன்றிகள். இந்த நிவாரணப் பொறிமுறை சிறப்பாகச் செயற்படுகின்றது. அதன் காரணமாகப் பொதுமக்களுக்கும், பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் நிவாரணங்களை வெற்றிகரமாக வழங்கமுடிந்துள்ளது- என்றார். (ச-இ)

## புதையல் தோண்டிய நால்வர் கைது

கொழும்பு,டிசெ.15

தனமல்வில பட்டுவேவ பகுதியில் புதையல் தோண்டிய நான்கு சந்தேகநபர்கள் நேற்றுமுன் தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தனமல்வில பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப் பின்போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## போலி நாணயத்தாள்களின் பணப்புழக்கம் அதிகரிப்பு

கொழும்பு,டிசெ.15

தமது கைகளுக்குக் கிடைக்கும் நாணயத்தாள்கள் குறித்து பொதுமக்கள் அவதானத்துடன் இருக்கவேண்டுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யூ.வுட்லர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

பண்டிகைக் காலத்தில் போலி நாணயத்தாள்களின் புழக்கம் குறித்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

## பாலியல் வன்கொடுமை; பிரிட்டனில் இலங்கையர் கைது

கொழும்பு,டிசெ.15

பிரித்தானியாவின் லண்டனில் சிறுமி ஒருவரைக் கடத்தி பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் இலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

20 வயதான இலங்கையரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)



## உணவுப்பொருள்கள் அரசாங்கம் இறக்குமதி

கொழும்பு,டிசெ.15

உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் பருப்பு ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது. சந்தையில் இந்த உணவுப் பொருள்களின் செயற்கையான விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் மற்றும் கூட்டுறவு மொத்தவிற்பனைக்கூட்டுத்தாபனம் ஆகியனமூலம் இந்த உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இவை லங்கா சதொச விற்பனை நிலையங்கள் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளன. (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை – கார்த்திகை 29
16.12.2025
சுபநேரம் : 06.16 - 07.46
ராகுகாலம் : 10.46 - 12.16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிடரால் சேதமடைந்த வடக்கு வீதிகளை சீரமைப்பதற்கான நிதியை அரசு விடுவிக்கும்!



## ஜனாதிபதி தெரிவிப்பு

மன்னார்,டிசெ.15
அண்மைய பேரிடரால் வடக்கு மாகாணத்தில் சேதமடைந்த உள்ளக வீதிகளைச் சீரமைப்பதற்குத் தேவையான நிதியை வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது. அத்தியாவசியமான கிராமிய வீதிகளைச் சீரமைப்பதே எமது முக்கியமான இலக்கு என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். மன்னார் மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம், மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.
அதில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத் துறைகளான விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றைக் கட்டியெழுப்புவதிலும், உட்கட்டுமானங்களை மீளமைப்பதிலும் எமது முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும். மன்னார் மாவட்டத்தில் வெள்ளம் கடலைச் சென்றடைவதற்கான வடிகான் வசதிகளை உரிய ஆய்வுகளை மேற்கொண்டு துரிதமாக மேற்கொள்ளவேண்டும். மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் விநியோகத்தையும் சீராக முன்னெடுக்க வேண்டும். நீரேந்துப் பிரதேசங்களை ஆக்கிரமித்து நெற்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (க-60)

# அழிவடைந்த வாழைகள் விவரங்கள் சேகரிப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.15
டித்வா புயலால் அழிவை எதிர்கொண்ட வாழைச் செய்கையாளர்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக, கமக்கார அமைப்புகள் விவரங்களைத் திரட்டிவருகின்றன.
கோப்பாய்,நீர்வேலிப் பிரதேசங்களின் வாழைச் செய்கையாளர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து அந்தந்தக் கமக்கார அமைப்புகளிடம் ஒப்படைத்து வருகின்றனர்.
விண்ணப்பப்படிவத்துடன் அழிவடைந்த வாழைகளின் நிழற்படங்கள் கட்டாயம் இணைத்திருக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வலிகாமம் கிழக்கில் பல ஆயிரக்கணக்கான வாழைச் செய்கை சீரற்ற காலநிலையால் அழிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க17)





# கோண்டாவில் பரஞ்சோதி வித்தியில் கொமர்ஷல் வங்கியினர் சிரமதானம்

யாழ்ப்பாணம்,டிசெ.15
பாடசாலைகள் நாளை மீண்டும் ஆரம்பமாகவுள்ள நிலையில், கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில், திருநெல்வேலி கொமர்ஷல் வங்கிக் கிளையினரால் நேற்றுச் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.
அண்மையில் ஏற்பட்ட வெள்ள இடரில் அதிகளவான பாடசாலைகளும் பாதிக்கப்பட்டன. இந்த நிலையில் பாடசாலைகளின் சுகாதாரம் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தும் நோக்கில், திருநெல்வேலி கொமர்ஷல் வங்கிக் கிளையினரால் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது. வங்கிகளும், பாடசாலையும் எனும் தொனிப்பொருளின் கீழ் வங்கியின் முகாமையாளர், சக ஊழியர்கள் மற்றும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் இணைந்து சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். (க-15)

# மரக்கறி உற்பத்தி 20 வீதம் வீழ்ச்சி!

கொழும்பு,டிசெ.15
நுவரெலியா போன்ற மாவட்டங்களின் புள்ளிவிவரங்களின்படி, இயற்கைப் பேரிடர்கள் காரணமாக மரக்கறி உற்பத்தியில் 20 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளது என்று அத்தியாவசியச் சேவைகள் ஆணையர் ஜெனரல் பிரபாத் சந்திர கீர்த்தி தெரிவித்துள்ளார். பேரிடர் காரணமாக, காய்கறி விலைகள் உடனடியாக வேகமாக அதிகரித்தன. இப்போது அவற்றின் விலைகள் குறைந்துள்ளன. நுவரெலியா போன்ற பகுதிகளிலிருந்துவரும் அறிக்கைகளின்படி மரக்கறிகளின் விநியோகத்தில் 20 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளது. எனினும் தேவைகளைப் பூர்த்திசெய்யமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் 19ஆவது ஆண்டு நினைவேந்தல், தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி அறிவகம் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. அவரது திருவுருவப்படத்துக்கு ஈகைச்சுடர் ஏற்றி, அஞ்சலி செலுத்தப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் நிகழ்வில் பங்கேற்றனர். (க-113)



சந்நிதியான் ஆச்சிரமத்தால் செஞ்சோலை சிறுவர் அபிவிருத்தி நிலையத்துக்கு அத்தியாவசிய உலருணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (ச-66)

### முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலைய

# இறுதிக்கட்டப் பணிகளுக்கு ரூ. 42 மில்லியன் ஒதுக்கீடு

முல்லைத்தீவு,டிசெ.15
முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலையத்தின் இறுதிக்கட்டப்பணிக்கு நகர அபிருத்தி அதிகாரசபையினால் 42 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலைய முதற்கட்ட கட்டுமானப் பணிகள் 2018ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன.
எனினும் நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக தடைப்பட்டிருந்த 2ஆம் கட்டப்பணிகள் 2024ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.
இந்த நிலையில் இறுதிக்கட்டப் பணிகள் அடுத்த வருட நடுப்பகுதியில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட வெள்ள அனர்த்தப் பாதிப்புகள் தொடர்பான நிலைமைகளைப் பார்வையிடுவதற்காக களவிஜயம் மேற்கொண்ட நகர அபிவிருத்திப் பிரதி அமைச்சர் எரங்க குணசேகர முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலையத்தைப் பார்வையிட்டார். இதன்போது முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலையத்தில் மேற்கொள்ள வேண்டிய மேலதிக பணிகள் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் விளக்கமளித்தார். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் துறைமுகங்கள் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்

கீவ், டிசெ.15



உக்ரைனில் உள்ள துறைமுகங்கள் மீது ரஷ்யா நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் நடத்தியது.

உக்ரைனின் ஒடிசா மாகாணத்தில் கருங்கடல் பகுதியில் அமைந்துள்ள குரோனொமோர்க், ஒடிசா ஆகிய 2 துறைமுகங்கள் மீது ட்ரோன்கள், ஏவுகணைகள் மூலம் ரஷ்யா தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் துறைமுகங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கப்பல்கள் கடும் சேதமடைந்தன. குறிப்பாக குரோனொமோர்க் துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த துருக்கி நாட்டின் 3 கப்பல்கள் சேதமடைந்தன. இந்தக் கப்பல்கள் உணவுத் தானியங்களைக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டு வந்தன என்று உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)


## பணிப் பெண் தேவை

யாழ் நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப் பெண் ஒருவர் தேவை. **சம்பளம் : 30000/=**

தொடர்பு: **077 327 6502**

(CS 60173) E


## மலிவு விற்பனை

இன்று முதல் 5 நாட்களுக்கு மட்டும் பூங்கன்றுகள் மட்டும் 100/= 20% விலை குறைவாக விற்பனை செய்யப்படும்.

"யாழ் சிற்றி பாம்" ஆறுகால் மடம், 755 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

(CS 60176) E


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21 . 11 . 1947

மறைவு 19 . 11 . 2022

### அமரர் ஆறுமுகம் பேரின்பநாயகம் (குணம்)

**திதி: கார்த்திகை மாத தேய்பிறை ஏகாதசி**


பேரின்பத்துடன் எம்மைப் பெற்றெடுத்து
கண்ணுக்குள் கண்ணாக வளர்த்து
நோய்நொடி வராமல் பாதுகாத்து
நற்குணங்களைச் சொல்லித்தந்து
எம்மை ஆளாக்கிய அப்பாவே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு
ஒருபோதும் பிரியாது
மூன்றாம் ஆண்டு நினைவுநாளில்
உங்கள் நினைவுகளை
இதயத்தில் தாங்கி நிற்கின்றோம்.

*நீங்காத நினைவுகளுடன்*
**மனைவி மற்றும் பிள்ளைகள்.**

(CS 30788) A

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 08 . 1948

மறைவு 13 . 12 . 2025

### கனகசபை சிவபாலசிங்கம் (துரை)

**(ஓய்வுநிலை உத்தியோகத்தர் - யா/போதனா வைத்தியசாலை)**

அரியாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சிவபாலசிங்கம் (துரை) 13.12.2025 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - அன்னம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - மாரிமுத்து தம்பதியரின் மருமகனும், கோசலாதேவியின் (கோசலா) பாசமிகு கணவனும், ஜெயக்காந் (பொறியியலாளர்), சந்திரகாந் (இலங்கை வங்கி உத்தியோகத்தர்), கௌசிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), ஷிவரங்கன் (ஆசிரியர்), கௌதமி (முகாமைத்துவசேவை உத்தியோகத்தர்) ஆகியோரின் அருமைத் தந்தையும், தர்ஷிகா (மென்பொறியியலாளர்), சுகன்யா, ராஜ்குமார் (குடியேற்ற உத்தியோகத்தர்), நிதர்ஷா (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனும், அநபாயன், சந்தியா, ஆதிரா, சாகித்தியா, ஆகிஷன், அபிஷனா, சாத்விகன் ஆகியோரின் அன்புப் பேரனும், வரதராசா, காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் நாகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரி, பாலசுப்ரமணியம், தியாகலிங்கம், சரஸ்வதி, யோகாதேவி, மகாலிங்கம், தவளாம்பிகை, காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம், சோதிலிங்கம், வள்ளியம்மை, பவானி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2025) திங்கட்கிழமை அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 02.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**40/2, கலைமகள் வீதி,**
**அரியாலை**
**யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CR 60175) E

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 03 . 1936

மறைவு 14 . 12 . 2025

### நல்லையா மகாலட்சுமி

**(மங்கையற்கரசி)**

வேலணையைப் பிறப்பிடமாகவும், ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா மகாலட்சுமி (மங்கையற்கரசி) நேற்று (14.12.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சின்னநாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நல்லையாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா - அன்னபூரணம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், அன்னக்கிளி, நாகேஸ், பாலன் மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பருவதம், செல்லத்துரை, தம்பிப்பிள்ளை, கந்தசாமி, தேவி மற்றும் செல்லம்மா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், நாகேந்திரராசா, மகேந்திரராசா, ஜெகதீஸ்வரி, விக்கினேஸ்வரி, கலாநிதி, சசிகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், கோமளாம்பிகை, யோகேஸ்வரி, இராசேந்திரம், விக்கினேஸ்வரன், ஜெயபாலன், குகதாஸ் ஆகியோரின் பாசமிகு மாமியும், பாரதி (அமெரிக்கா), தாரணி (சுவிஸ்), ஜெனார்த்தனன் (லண்டன்), வாசுகி, அனுஷாந்தன் (அவுஸ்ரேலியா), வித்தகி (ஜேர்மன்), வதனிசோபா, ஞானகீர்த்திகன், துர்க்கா, வைஸ்ணவி, ஞானகார்த்திகன், நிரோஜன் (துபாய்), நிலானி, நிதர்ஷா, நிரஞ்சினி, லங்சி, பிரசன்னா, பார்த்தீபன் (மலேசியா), விஜிதா, பவித்ரா, எக்சிபா, கேசியா, ஜெயதர்சன், ஜெயதர்சிகா (லண்டன்), ஜெயகஜீபன், ஜெயகௌசிகா (லண்டன்), ஜெயறெபேக்கா, ஜெயகலைக்சன், மதூஷா, கோபிசாந், சகானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நாச்சிமார் கோவிலடியிலுள்ள மகனது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**K.K.S வீதி,**
**நாச்சிமார் கோவிலடி,**
**யாழ்ப்பாணம்**

**தகவல்: குடும்பத்தினர்**
**076 636 5971**

(CS 60172) E

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம்
05 . 06 . 1944

மறைவு
14 . 12 . 2025

### வல்லிபுரம் பிறேமசியாமளா

**(முன்னாள் கணக்காளர், லலிதா ஜீவல்லரி - கொழும்பு)**

மந்திகையை பிறப்பிடமாகவும், கரவெட்டி கிழக்கு மற்றும் சிவன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பிறேமசியாமளா அவர்கள் நேற்று (14.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா வல்லிபுரம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களது அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பிறேம நிர்மலா மற்றும் பிறேம காந்தா (கொழும்பு), P.A.G மோகன் (திருநெல்வேலி), கருணேந்திர லதா (நியூசிலாந்து), லீலா ரமணி (மந்திகை), சுவர்ணாம்பிகை (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை, இராஜசுந்தரம், ரூபா (திருநெல்வேலி), அருளாநந்தம், வேலும் மயிலும், ஸ்ரீதரன் ஆகியோரின் மைத்துனியும், ஆர்த்திகாவின் பெரியம்மாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2025) திங்கட்கிழமை 30/1, சிவன் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் காலை 09.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**30/1, சிவன் வீதி,**
**திருநெல்வேலி**
**யாழ்ப்பாணம்**

**தகவல் : குடும்பத்தினர்**
**021 221 9884, 077 735 3712**

(CS 50178) E

## மரண அறிவித்தல்



தோற்றம்
25 . 12 . 1945

மறைவு
13 . 12 . 2025

### வல்லிபுரம் செல்வவிநாயகம்

**(சைக்கிள் கடை விநாயகம்)**

கரவெட்டியை பிறப்பிடமாகவும் மகாத்மா வீதி நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்வவிநாயகம் (சைக்கிள் கடை விநாயகம்) அவர்கள் கடந்த 13.12.2025 சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.


அன்னார் அமரர்களான வல்லிபுரம் - தெய்வானை தம்பதியின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும் சிற்பரன், அனிந்திதை, சிற்குமரன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், வாணி, விஜேந்திரா, குமுதா ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிலாஷ், அச்சுதன், ஆரணி, அஜன், ஷானுஜா, ஆருஷன், அஸ்விகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இடம்பெற்று நாளை 16.12.2025 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் சோனப்பு இந்து மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் அறியத்தருகின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(CS 30786) A

## மரண அறிவித்தல்



### கார்த்திகேசு சிவஞானம்

**(ஓய்வுபெற்ற பொது முகாமையாளர், தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்)**

வசந்தபுரம் இளவாலையைப் பிறப்பிடமாகவும் புதுத்தோட்டம் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சிவஞானம் (ஓய்வுபெற்ற பொது முகாமையாளர், தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்) அவர்கள் கடந்த 12.12.2025 அன்று இறையடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - லட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான குருசாமி -இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி ஜெயபவானி (ஓய்வுநிலை கணக்காளர், தெல்லிப்பழை ப.தெ.வ.அ.கூ.ச) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் அன்னபாக்கியம், சிவராசா, லீலாதேவி, தவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் நவரத்தினம், செல்வமலர் (றஞ்சி), முருகையா, கிருபாகரன், காலஞ்சென்ற ஜெயராசா மற்றும் ஜெயமலர், ஜெயபாலச்சந்திரன், ஜெயராணி, ஜெயந்திமாலா, ஜெயறஞ்சி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மேகலா, தேவகி, துவாரகன், கலைவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதாஸ்கரன், அபிராமி, சரன்ஜன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஆருகி, அகீரா, அதீரன், அகரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தெல்லிப்பழை இல்லத்தில் இன்று (15.12.2025) திங்கட்கிழமை நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம்
23.09.1955

மறைவு
12.12.2025

**தகவல் :**
சரன்ஜன் (மருமகன்) 077 489 3000
தேவகி (மகள்) 077 236 7543
**குடும்பத்தினர்**

(CS 30789) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான வதிவிடக் காணிகளை மலையக மக்களுக்கு உறுதி செய்க!

## மனோ எம்.பி. வலியுறுத்து

**கொழும்பு,டிசெ.15**

**மலைநாட்டில் பேரவலத்துக்குப் பின்னர் எழுந்துள்ள, 'பாதுகாப்பான வதிவிடக் காணி' என்ற உரிமைக் கோரிக்கையை அரசுடன் உரையாடி பெற அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மலையகப் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி இணைந்து செயற்படத் தயார். மலையக சமூகத்தில் மிகவும் விளிம்பு நிலையில் வாழும் பிரிவினரின் பரிதாப சமூகப் பிரச்சினையை அடையாளம் கண்டு, இவர்களுக்கு பாதுகாப்பான வதிவிடக் காணிகளை அரசாங்கம் வழங்கவேண்டும்.**


இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இதற்கு முன் நடைபெற்ற அவலங்களைவிட இந்த முறை அவலம் அவதானத்துக்கு உரியது. ஏறக்குறைய பெரும்பாலான மலைப் பகுதிகள், மலைப் பாறைகள், மலை மேடுகள், தரை நிலங்கள் ஆகியன வெடித்துள்ளன. இடைவெளிகளில் நீர் வெளியேறுகின்றது. இது இயற்கை அனர்த்தம்.

இதுதொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் நான் கடந்த வாரம் நேரடியாக நாடாளுமன்றத்தில் உரையாடியுள்ளேன். பாதுகாப்பான மாற்றுக்காணிகள் இவர்களுக்கு வழங்கப்படவேண்டும். அதுவும் அவசரமாக முன்னுரிமை அடிப்படையில் நடைபெற வேண்டும்.

ஆகவே, அரசியல் கட்சி, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, பேதங்களுக்கு அப்பால் இந்த விடயத்தில் நாம் ஒன்றுபட்டுச்செயற்பட்டு அவர்களுக்கு பாதுகாப்பான வதிவிடக் காணிகளை அரசிடம் கோரி பெறுவோம் - என்றார். (ச-இ)



# அரிசித் தட்டுப்பாடு நாட்டில் ஏற்படாது!

*விவசாய அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு,டிசெ.15


அனர்த்தம் காரணமாக எதிர்காலத்தில் நாட்டில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சாத்தியமில்லை என்று விவசாய அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில அரிசி வகைகளைப் பயிரிடும் அளவுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகவே சில சந்தர்ப்பங்களில் அரிசியை இறக்குமதி செய்ய நேரிட்டது.

மீண்டும் எழுவது குறித்த மிகப்பெரும் அனுபவம் விவசாய மக்களுக்கே உள்ளது. விவசாய மக்கள் இந்த அழிவின்போதும் மீண்டும் எழுவார்கள்.

எதிர்காலத்தில் அரிசிப்பிரச்சினைவரும் வாய்ப்பில்லை. பயிரிடப்படும் அளவுகளில் உள்ள மாற்றங்கள் காரணமாக சில அரிசி வகைகளை வெளிநாட்டிலிருந்து கொண்டுவர வேண்டியுள்ளது. கடந்த நாள்களில் நாம் கீரிச் சம்பாவை குறிப்பிட்டளவு இறக்குமதி செய்தோம். கீரிச் சம்பா பயிரிடப்படும் அளவு குறைந்ததாலேயே அதனை இறக்குமதி செய்ய நேரிட்டதே தவிர, நாட்டில் அரிசித் தட்டுப்பாடு நிலவுவதால் அல்ல - என்றார். (ச-இ)



# கட்டாக்காலி மாடுகளால் எஞ்சிய பயிர்களும் நாசம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.மாவட்டத்தில் டித்வா புயல் மற்றும் கடும் மழையால் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ள நிலையில், எஞ்சிய பயிர்களையும் கட்டாக்காலி மாடுகள் நாசம் செய்துவருகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நாவற்குழிச் சந்தியில் இரவில் நிற்கும் மாடுகள் பகலில் அருகிலுள்ள தோட்டம் மற்றும் வயல்களில் இறங்கி பயிர்களை மேய்கின்றன. கழுத்தில் கயிறு இல்லாமல் கட்டாக்காலி மாடுகள் திரிவதால், அவற்றைப் பிடிக்கமுடியாதுள்ளது. மாடுகள் தொடர்ந்து பயிர்களை மேய்ந்து சேதப்படுத்துகின்றன.

வெள்ளத்தில் பயிர்கள் அழிவடைந்துள்ள நிலையில், எஞ்சியுள்ள பயிர்களையும் கட்டாக்காலி மாடுகள் அழித்துவருகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே உடனடியாக கால்நடைகளின் உரிமையாளர்கள், கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளைப் பிடித்துக் கட்டிவளர்க்கவேண்டும் என்று நாவற்குழி மேற்கு விவசாய சம்மேளனத்தினர் கேட்டுள்ளனர். (க-159)

# நாட்டில் 6164 வீடுகள் முழுமையாகச் சேதம்!

கொழும்பு,டிசெ.15


டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களினால் நாட்டில் 6 ஆயிரத்து 164 வீடுகளுக்கு முழுமையான சேதம் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்றுக் காலை வெளியிட்ட புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் அனர்த்தங்கள் காரணமாக ஒரு இலட்சத்து 12ஆயிரத்து 110 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இதேவேளை மண்சரிவு மற்றும் வெள்ளம் உள்ளிட்ட அனர்த்தங்கள் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 643 ஆக அதிகரித்துள்ளது.

இந்த அனர்த்தங்களில் சிக்கி இதுவரை 184 பேர் காணாமற்போயுள்ளனர். 23ஆயிரத்து 41 குடும்பங்களைச் சேர்ந்த 72 ஆயிரத்து 911 பேர் 796 பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். டித்வா புயல் தாக்கம் காரணமாக 3இலட்சத்து 91 ஆயிரத்து 401 குடும்பங்களைச் சேர்ந்த 1,364,481 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# மதுபான உரிமக் கட்டணம் 100 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு,டிசெ.15

அனைத்து மதுபான உரிமக் கட்டணங்களையும் 100 வீதத்தால் அதிகரிக்க கலால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைத்த யோசனைக்கு அமையவே கலால் திணைக்களம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. இதற்கமைய, வருடாந்த கலால் கட்டணங்கள், தொழிற்றுறைக்கான அணுகலுக்காக ஒருமுறை அறவிடப்படும் கட்டணங்கள் மற்றும் பாதுகாப்பு வைப்புத்தொகை என்பனவும் அதிகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# இடரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் புகைப்படங்களைப் பகிராதீர்கள்!

கொழும்பு,டிசெ.15

தற்போது நிலவும் பேரிடர் சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் புகைப்படங்கள், வீடியோக் காட்சிகள் அல்லது தனிப்பட்ட விவரங்களை சமூக ஊடகங்களில் பகிர்வதைத் தவிர்க்குமாறு சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சகம் கோரியுள்ளது.

அத்தகைய தகவல்களைப் பகிர்வது பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அடையாளம் மற்றும் தனியுரிமையை கடுமையாகப் பாதிக்கக்கூடும்.

அத்துடன், அவர்களின் விவரங்கள் மற்றும் படங்கள் கடத்தல்காரர்கள் மற்றும் சட்டவிரோத நோக்கங்களுக்காக தவறாகப் பயன் படுத்தும் பிற குற்றவியல் நபர்களின் கைகளில் சிக்குவதற்கு வழிவகுக்கும்.

அதேவேளை சிறுவர் சுரண்டல் மற்றும் கடத்தல் உள்ளிட்ட செயல்களுக்கு இதுபோன்ற தகவல்களைப் பயன்படுத்தும் அல்லது பரப்பும் நபர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு...

இந்தச் சம்பவம் தொடர்பில் இருவரை தமிழக மரைன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முள்ளிமுனைக் கடற்கரையிலிருந்து இலங்கைக்கு கஞ்சா கடத்தப்படவுள்ளது என்று மரைன் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் அந்தப் பகுதியில் ரோந்து நடவடிக்கை தீவிரப்படுத்தப் பட்டிருந்தது. மரைன் பொலிஸாரைக் கண்டதும் இருவர் தப்பியோடிய நிலையில். அந்தப் பகுதியில் தீவிர தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. அதில் கடற்கரையில் பொதி செய்யப்பட்ட நிலையில், இலங்கைக்குக் கடத்துவதற்குத் தயராக இருந்த கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக முள்ளிமுனையைச் சேர்ந்த இருவரை தமிழக மரைன் பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ-எ-56)

## பேரிடர்...

வகிக்கவுள்ளார். 2004 ஆம் ஆண்டு சுனாமியைத் தொடர்ந்து, 2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க பேரிடர் முகாமைத்துவ சட்டத்தின் கீழ் இந்த சபை நிறுவப்பட்டது. எனினும், அந்தச்சபையின் செயல்பாடு இயங்கா நிலையிலேயே இருந்தது. அதனால் சட்டத்தில் சில திருத்தங்கள் தேவை என்றும், அது தொடர்பாக சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்றும் அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-எ-44)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 15.11.2025 சனிக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் பொன்னன் கிருஸ்ணநாதன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 13.12.2025 சனிக்கிழமை அன்று காலை 7.00 மணியளவில் “கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15.12.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னையா லேன்,
உம் ஒழுங்கை, ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.
077 891 4091

(CS 30788) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 06 . 1966



மறைவு 14 . 12 . 2025

### சிவலிங்கராசா வசந்தராணி

புத்தூர் மேற்கு கிந்துசிட்டியை பிறப்பிடமாகவும், புத்தூர் மேற்கு மருதடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கராசா வசந்தராணி நேற்று (14.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசையன் - பூலோகம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லன், காலஞ்சென்ற இளையபிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், சிகரம் சவுண்ட்ஸ் உரிமையாளர் சிவலிங்கராசாவின் அன்பு மனைவியும், பிரசாந், ரேணுஜா (சிகரம் அக்கடமி ஆசிரியர்), பிரதாப், சோபிகா, பிரகாசினி, காலஞ்சென்ற பிரகாஸ் ஆகியோரின் தாயாரும், வினோசியின் அன்பு மாமியும், சுவேதிகா, அபினந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2025) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் புத்தூர் மேற்கு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்: குடும்பத்தினர்.
(சிகரம் சவுண்ட்ஸ்)
077 834 675

(CS 30777) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 02 . 1952



மறைவு 14 . 12 . 2025

### செல்வி ஞானதேவி சின்னத்துரை

(ஓய்வுநிலை ஆசிரியர், இறக்கக்கண்டி அல்ஹம்ரா மகா வித்தியாலயம்)

பிள்ளையார் கோவிலடி, வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஞானதேவி சின்னத்துரை அவர்கள் நேற்று (14.12.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமு சின்னத்துரை இரத்தினம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, கந்தசாமி, நவமணி (ஓய்வுநிலை ஆசிரியர் இளவாலை திருக்குடும்ப மகா வித்தியாலயம்), தவமணி (ஓய்வுநிலை ஆசிரியர், பண்டத்தரிப்பு ம.ம.வி), கனகமணி (முன்பள்ளி ஆசிரியர்) மற்றும் கலாதேவி, சுதந்திராதேவி (ஓய்வுநிலை ஆசிரியர், யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), லீலாவதி (ஓய்வு நிலை ஆசிரியர், பண்டத்தரிப்பு கலைமகள் வித்தியாலயம்), சிவநிதி (ஓய்வுநிலை ஆசிரியர், திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2025) திங்கட்கிழமை வடலியடைப்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் அருகில் உள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 10 . 1945



மறைவு 14 . 12 . 2025

### திருமதி பார்வதி குமாரசாமி சர்மா

யாழ். வண்ணை- பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி குமாரசாமி சர்மா நேற்று (14.12.2025) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வியாகரண சிரோன்மணி தி.கி.சீதாராம சாஸ்த்ரிகள் - சீதாலட்சுமி அம்மா தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதி குருக்கள் - நீலாம்பிகை அம்மா தம்பதிகளின் மருமகளும், பிரம்மஸ்ரீ குமாரசாமி சர்மா அவர்களின் ஆசை மனைவியும், நந்தகோபன், கோகுலபாலன், முரளிதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதி தாரணி, திருமதி ஸ்ரீவித்யா, திருமதி சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமியும், ஷஷாங்க், சஹானா, ஹரிணி, சித்தார்த், பிருத்வீ, அதிதி ஆகியோரின் அருமைப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.12.2025 மதியம் 12.00 மணியளவில் 57 BA THAMBI LANE, வண்ணார்பண்ணையில் நடைபெற்று தகன கிரியைகள் கோம்பயன் மயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
நந்தன் +94778864265 - direct /WhatsApp
முரளி +94743844345 - direct /WhatsApp
கோகுலன் +16472825072 - direct /WhatsApp

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 60180) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரிடர் பாதித்த...

கோளை விடுத்துள்ளது. இந்த இயற்கை இடரால் 25 மாவட்டங்களில் 2 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சுமார் 5 லட்சத்து 20 ஆயிரம் வயது வந்த பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 22 ஆயிரத்து 500க்கும் அதிகமான கர்ப்பிணிப் பெண்கள் உள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியம் மதிப்பிட்டுள்ளது. அத்துடன் ஒரு லட்சத்து 94 ஆயிரத்துக்கும் அதிகமான வயதான பெண்களும் அடங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயற்கைப் பேரிடருக்குப் பின்னரான சூழலில், சுகாதாரச் சேவைகள் தடைப்பட்டதாலும், இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களில் பாதுகாப்பு மற்றும் தனிமைப் பாதுகாப்பு இல்லாமையாலும், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு பாலியல் வன்முறைக்கான அபாயமும் மனநலப் பிரச்சினைகளும் அதிகரித்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உடனடியாக ஆயிரத்து 225 அத்தியாவசியப் பொதிகளை விநியோகித்த ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம், நிலைமை மோசமடைந்து வருவதால், 2 லட்சத்து 8 ஆயிரத்துக்கும் அதிகமான பெண்களுக்கு இனப்பெருக்கச் சுகாதாரம், வன்முறைத் தடுப்பு மற்றும் மனநல ஆதரவு போன்ற அத்தியாவசியச் சேவைகளை வழங்கத்திட்டமிட்டுள்ளது.

ஆயினும் தேவையான நிதியில் வெறும் 2.5 சதவீதம் மட்டுமே கிடைத்துள்ள நிலையில், உயிர்காக்கும் உதவிகள் தேவைப்படுவோரைச் சென்றடைய உடனடி சர்வதேச ஆதரவை வழங்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியம் உலக நாடுகளையும் நன்கொடையாளர்களையும் கோரியுள்ளது. (அ-எ-இ)

## ஆயிரம்...

பிரேரணை முன்வைக்கப்படும் எனக் கூறியிருந்தார்.

எனினும், நலன்புரி கொடுப்பனவுகள் மற்றும் அவசர பழுதுபார்ப்பு பணி செலவுகள் தொடர்பான புதிய மதிப்பீடுகள் கணக்கிடப்பட்ட பின்னர், இந்தத் தொகை இரட்டிப்பாகியுள்ளது என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறைநிரப்பு பிரேரணை வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, 19 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்படும். எதிரணியும் இதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கவுள்ளது. அதன் பின்னர் சபை ஜனவரி 6ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்படவுள்ளது. (அ-எ-44)

## உடைந்த...

வருகின்றது. வீதியில் பயணிக்கும் வயதானவர்கள், தனியாகப் பயணிப்பவர்களை இலக்குவைத்தே இந்த நபர் தனது மோசடிக் கைங்கரியத்தை மேற்கொண்டுள்ளார். NP BFH8292 என்னும் இலக்கமுடைய 'வேகோ' ரக மோட்டார் சைக்கிளில் வரும் இந்த நபர், தான் இலக்குவைத்த நபர்களை முந்திச் சென்றுவிட்டுப் பின்னர் சேதமடைந்த கைபேசி ஒன்றைக் காண்பித்து அவர்களுடன் முரண்படுகின்றார்" எனது கைபேசியை தட்டிவிட்டு விட்டு சேதமாக்கிவிட்டீர்கள், திருத்துவதற்குப் பணம் வேண்டும்" என்று என்று கூறி அவர்களை அச்சுறுத்திப் பணத்தைப் பெறுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளார்.

இவ்வாறு பலர் ஏமாற்றப்பட்டுள்ள நிலையில், அவர்கள் 25 ஆயிரம், 20 ஆயிரம் எனப் பணத்தையும் இழந்துள்ளனர். அண்மையில் நல்லூர் சட்டநாதர் கோயிலடியிலும் இந்த நபர் இவ்வாறு பணத்தைப் பெற முயன்றுள்ளார். அது தொடர்பான பாதுகாப்புக் கமராப் பதிவுகளும் பெறப்பட்டுள்ளன. இந்தச் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட சிலர் இது தொடர்பாகப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தபோதும், அவர்கள் இந்த பகல்கொள்ளையில் ஈடுபடுபவர் மீது இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. குறித்தநபர் யாழ்ப்பாணம் நகருக்குள்ளே வசிப்பவர் எனவும், அவரை அடையாளம் காட்ட தயார் எனவும் பாதிக்கப்பட்ட பலரும் தெரிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-எ-இ)

## தராகி...

ஆழமான பகுப்பாய்வுக்கும், தாயகத்தின் நெருக்கடியான போர்ச்சூழலில் அவர் செயலாற்றிய வீரத்துக்காகவும், இலங்கையில் நடந்தேறும் அரச ஒடுக்குமுறையை உலகுக்கு அம்பலப்படுத்திய செயற்பாட்டுக்குமாக வரதகுமார் நினைவு விருது தமிழ் தகவல் நடுவத்தால் லண்டனில் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

மாமனிதர் சிவராமுக்கான சிறப்பு விருதை அவரின் மனைவி பிள்ளைகளிடம் சேர்க்கும் முகமாக தமிழ்நெட் ஆங்கில ஊடகத்தின் நிறுவக ஆசிரியரும் சிவராமின் நெருங்கிய ஊடக நண்பருமான ஜெயா கோபிநாத் (நோர்வே) பெற்றுக்கொண்டு சுருக்கமான நினைவுரை ஒன்றையும் ஆற்றினார்.

1979ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து முதலில் தமிழ்நாட்டை மையமாகக் கொண்டும் பின்னர் பிரிட்டனை மையமாகக் கொண்டும் ஈழத்தமிழர் அரசியல், மரபியல், மனித உரிமை ஆகிய விடயதானங்களை தரவுப்படுத்துவதில் தமிழ் தகவல் நடுவம் என்ற அமைப்பு தொடர்ச்சியாக இயங்கிவருகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஈழத்தமிழரிடையே சுதந்திரன் என்ற பத்திரிகை இயங்கியதற்குச் சமாந்தரமாக, ஆனால் கட்சிசார்பற்ற சுயாதீன ஆங்கில வாராந்தப் பத்திரிகையாக சற்றர்டே றிவியூ இயங்கிவந்தபோது அதன் ஆசிரியராக மறைந்த மூத்த பத்திரிகையாசிரியரான எஸ். சிவநாயகம் பணியாற்றியிருந்தார். அவர் தமிழ் தகவல் நடுவத்தில் இணைந்து பிற்காலத்தில் காத்திரமான தரவுப்படுத்தும் பணிகளை மேற்கொண்டிருந்த போது அவரோடு நெருக்கமாகப் பணியாற்றிய வைரமுத்து வரதகுமார் (1949-2019) நடுவத்தின் பணிகளை அதன் முழுநேரச் செயற்பாட்டாளராகவும் வாழ்நாட் செயற்பாட்டளராகவும் தொடர்ச்சியாக மேற்கொண்டுவந்தார். தமிழ் தகவல் நடுவத்தால் ஆண்டுதோறும் மனித உரிமை நாளை ஒட்டி வரதகுமார் நினைவு விருது வழங்கப்பட்டுவருகிறது.

பிரிட்டனில் இருந்து இயங்கும் அந்நாட்டைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞரான போல் ஹெரன் என்பவருக்கும் இரண்டாம் தலை முறை ஈழத்தமிழர் வழக்கறிஞையான சாந்தி சிவகுமாரனுக்கும் 2025 ஆம் ஆண்டுக்கான மனித உரிமை விருது வழங்கப்பட்டது.

பிரிட்டனில் ஈழத்தமிழர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட இலங்கைத் தூதரலாயத்தில் கடமையாற்றிய முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவருக்கெதிரான சட்ட நடவடிக்கை உள்ளடங்கலாக பல சட்ட நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டிருந்தமைக்கான அங்கீகாரமாக மனித உரிமை விருதுகள் வழங்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-எ-இ)

## சிட்னியில்...

துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்துடன்தொடர்புடைய துப்பாக்கிதாரி ஒருவர் கொல்லப்பட்டுள்ள நிலையில், மற்றுமொரு துப்பாக்கிதாரியை நியூ சவுத் வேல்ஸ் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹனுக்கா யூதமதத் திருவிழாவைக் கொண்டாடுவதற்காக கடற்கரையில் நடைபெற்ற நிகழ்வின்போதே இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது. (அ-எ-இ)

## அன்ரன்...

விலும் நடத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நினைவேந்தல் நடைபெற்றது.

அன்ரன் பாலசிங்கத்தின் உருவப்படத்துக்கு ஈகச்சுடரேற்றப்பட்டு, மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

வவுனியாவில் திருநாவற்குளத்தில் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

அன்ரன் பாலசிங்கத்தின் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டு நினைவேந்தப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் பலர் கலந்துகொண்டு கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு அஞ்சலி செலுத்தினர். (அ-எ-110-66)

## பயங்கரவாதத்...

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தயாராகிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த ஊடகத்தில் வெளியான செய்தியில், இந்த சட்டத்தின்கீழ் பயங்கரவாதச் செயலை மேற்கொள்பவர்களுக்கு மேல் நீதிமன்ற விசாரணைக்குப்பிறகு இருபது ஆண்டுகள் சிறைத் தண்டனை முதல் ஆயுள் தண்டனை வரை கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம், எண். 2026 என்ற பெயரில் இந்த புதிய சட்டம் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இது தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றாகக் கொண்டு வரப்படவுள்ளது.

வேண்டுமென்றோ அல்லது தெரிந்தோ, பயங்கரவாத நிலையைத் தூண்டும் எந்தவொரு செயலும், பொதுமக்களின் எந்தவொரு பிரிவையோ அச்சுறுத்துவது, இலங்கை அரசாங்கத்தையோ அல்லது வேறு எந்த அரசாங்கத்தையோ அல்லது ஒரு சர்வதேச அமைப்பையோ, எந்தவொரு செயலையும் செய்யவோ அல்லது செய்யாமல் இருக்கவோ கட்டாயப்படுத்துவது, போரைப் பரப்புவது, அல்லது பிராந்திய ஒருமைப்பாட்டை மீறுவது, அல்லது இலங்கை அல்லது வேறு எந்த இறையாண்மை கொண்ட நாட்டின் இறையாண்மையை மீறுவது போன்ற குற்றங்கள், முன்மொழியப்பட்ட யோசனையில் பயங்கரவாதக் குற்றங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர்களாகவோ, பயங்கரவாத வெளியீடுகளை ஊக்குவிப்பதற்காகவோ அல்லது பரப்புவதற்காகவோ அல்லது பயிற்சி அளித்ததற்காகவோ குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டவர்களுக்கு பதினைந்து ஆண்டுகள் சிறைத்தண்டனையும் பதினைந்து மில்லியன் ரூபா அபராதமும் விதிக்கப்படலாம்.

நியாயமான சந்தேகத்தின் பேரில் நபர்களை 'நிறுத்திச் சோதனையிடவும்', சந்தேகநபர்களிடமிருந்து பொருள்களைப் பறிமுதல் செய்யவும் இராணுவத்தினருக்கு அதிகாரம் உள்ளது. ஒரு சந்தேக நபர் காவலில் எடுக்கப்பட்டவுடன், அத்தகைய கைதுகள் தொடர்பாக 24 மணி நேரத்திற்குள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் தெரிவிக்கப்பட வேண்டும். பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமிருந்து இரண்டு மாதங்களுக்கு தடுப்புக்காவல் உத்தரவைப் பெறவும் இந்த சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது என்று அந்த ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

## மசகு...

எது என்று தெரிவிக்கப்படுகிறது. கசிந்த எண்ணெய்யை அகற்றும் பணிகளில் இலங்கை கடலோரப் பாதுகாப்புப் படை மற்றும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை என்பன இணைந்து ஈடுபட்டுள்ளன. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகளில் சிரமதானம்

யாழ்.மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் சுற்றுப்புறச்சூழல் துப்புரவுசெய்யப்பட்டு வருகின்றது. நீண்ட நாள் விடுமுறையின் பின்னர் பாடசாலைகள் நாளை செவ்வாய்க்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த நிலையில் வெள்ளம் தேங்கியிருந்த பாடசாலைகளில் கழிவுகள் அகற்றப்பட்டு, சுற்றுப்புறச்சூழல் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது. பாடசாலைச் சமூகத்தினருடன், மாணவர்களின் பெற்றோரும் இணைந்து சிரமதானத்தில் ஈடுபட்டுள்ளனர். (க-17)

## சோமவாரப்பூசை

கார்த்திகை ஐந்தாம் திங்கள் சோமவாரத்தின் இறுதிநாளை முன்னிட்டு, இன்று திங்கட்கி ழமை ஆலயங்களில் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெறும். சிவாலயங்கள் மற்றும் முருகன் ஆலயங்களில் சோமவாரத்தை முன்னிட்டு, விசேட அபிசேகம் மற்றும் பூசைகள் இடம்பெறும். (க-17)

## இயற்கை...

ஓடி ஒளிவதோ அல்லது அச்சத்துடன் பார்ப்பதோ அல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற கடற்படையின் நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான உறுதியுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். போதைப் பொருள் கடத்தலில் இருந்து நாட்டை மீட்டெடுக்க அரசாங்கம் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும். இந்த அச்சுறுத்தலில் இருந்து தாய்நாட்டைக் காப்பாற்ற அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (அ-எ-இ)

# பாலியல் வன்கொடுமைகள் சமூகத்தைத் தாக்கும் சாபக்கேடு

### மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவிப்பு

**மன்னார்,டிசெ.15**

**இலங்கையில் பாலியல் வன்புணர்வுக் குற்றங்கள் பரவலாக அதிகரித்து வருகின்றது. இது நாட்டின் சமூகக் கட்டமைப்பின் மீதான அழிவுகரமான சமூக விளைவுகளை எடுத்துக்காட்டுகின்றது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது அண்மைய தீர்ப்பில் கடுமையாக வலியுறுத்தியுள்ளது.**

15 வயது சிறுமியைப் பாலியல் வன்புணர்வு செய்த குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட்ட ஒருவர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளது. 2006ஆம் ஆண்டு சிலாபம் பகுதியில், 27 வயதுடைய ஒருவரால் 15 வயது சிறுமி ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு ஆளானார். பாதிக்கப்பட்ட சிறுமிக்குப் பிறந்த குழந்தைக்குக் குற்றஞ்சாட்டப்பட்டவரே தந்தை என்பது ஆதாரங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டது குற்றஞ்சாட்டப்பட்டவர் அனைத்து குற்றச்சாட்டுகளையும் ஒப்புக்கொண்டார். அதனையடுத்து அவருக்கு சிலாபம் நீதிமன்றம் 18 ஆண்டுகள் கடுழிய சிறைத்தண்டனை விதித்தது. தனக்கு விதிக்கப்பட்ட 18 ஆண்டுகள் சிறைத்தண்டனை அதிகமானது என்று குற்றஞ்சாட்டப்பட்டவர் மேன்முறையீடு செய்திருந்தார்.

ஆனால், மேலதிக மன்றாடியார் நாயகம் ஷனில் குலரத்ன, குற்றஞ்சாட்டப்பட்டவர் பாதிக்கப்பட்ட சிறுமியின் நம்பிக்கைக்குரிய நிலையில் மற்றும் பாதுகாவலராக இருந்த பொறுப்பை மீறியுள்ளார் என்று சுட்டிக்காட்டியதை அடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றம் மனுவைத் தள்ளுபடி செய்தது. நீதியை நிலைநாட்டுவதற்கும் எதிர்காலக் குற்றங்களைத் தடுப்பதற்கும் கடுமையான பாலியல் குற்றவாளிகள் முறையாகக் கையாளப்படுவது இன்றியமையாதது. பாலியல் வன்புணர்வு என்பது "வெறுமனே ஒரு குற்றம் அல்ல, மாறாக சமூகத்தின் இதயத்தையே தாக்கும் ஒரு சாபக்கேடு" என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (ச-இ)

**தனியார் வகுப்புகள் (Personal Classes)**

A/L மாணவர்களுக்கான இரசாயனவியல், பௌதீகவியல், உயிரியல் ஆகியன ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலம் (English & Tamil Medium) வீட்டில் வந்து கற்பிக்கப்படும். தொடர்பு : 076 052 6140

தரம் 06 தொடக்கம் O/L வரை விஞ்ஞானம், கணிதம், ICT தொடர்பு : 074 075 9308

(CS 60177) E

**வேலையாட்கள் தேவை**

**AC Technicians**

**(Ac திருத்துபவர்கள்) தேவை.**

முன்னனுபவம் உள்ளவர்கள் / முன்னனுபவம் அற்றவர்கள்

தொடர்பு: 077 149 7617

(CS 60176) E

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 08 . 1936



மறைவு 13 . 12 . 2025

### தியாகராசா அன்னலட்சுமி

தனங்களப்பைப் பிறப்பிடமாகவும், கல்வயல் மற்றும் சாவகச்சேரியை வதிவிடங்களாகவும் கொண்ட தியாகராசா அன்னலட்சுமி அவர்கள் கடந்த 13.12.2025 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு - பொன்னம்மா தம்பதியரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்ற தியாகராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், சின்னத்தம்பி (முன்னாள் அதிபர் யா/அமிர்தாம்பிகை வித்தியாலயம்) அவர்களின் மைத்துனியும், கோடீஸ்வரன் (கனடா), இராஜேஸ்வரி, விக்னேஸ்வரன் (யா/ அருணோதயக் கல்லூரி), திருச்செல்வி (யா/டிறிபேக் கல்லூரி), திருச்செல்வம் (சாயி மில் உரிமையாளர்), நடராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிறேமளா (கனடா), காலஞ்சென்ற சங்கரலிங்கம் (நில அளவை உத்தியோகத்தர்), செல்வராணி (ஆசிரியர், யா/ஏழாலை ம.வி) பிரபாகரன், இராஜேஸ்வரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கோப்பாய் பிரதேச செயலகம்), பிரிந்தா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், ஆனந்தகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்களின் பெரியம்மாவும், அர்தனி, அபிசயா, ஜனார்த்தன், ஜனார்த்தனி, விதுசன், சகானன், சரண்யன், சாயி கீர்த், கவிஷா, கஷ்ணிகா, சர்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


முருகமூர்த்தி கோவில் வீதி,
சாவகச்சேரி வடக்கு,

**தகவல் : குடும்பத்தினர்.**
பிரபா (மருமகன்) - 077 907 3805
விக்கி (மகன்) - 077 806 5386

(CR 46698) A

## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு

தோற்றம் 03 . 10 . 1948



மறைவு 26 . 11 . 2024

கடந்த வருடம் 26.11.2024 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எமது மைத்துனர்

### அமரர் இராசையா மகேஸ்வரலிங்கம்

அவர்களின்

முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று (15.12.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பிகை ஸ்ரோர்ஸ்
செல்லப்பா வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்

**குடும்பத்தினர்**
**076 368 6510**

(CS 60174) E

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org